1978 பிப்ரவரி 28]

கள் ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிருர்கள். அவரது செல்லப் பிள்ளையாக, மண்டு மந்திரி என்று அழைக்கப்படும் அமைச்சரவர்கள் அதைத்தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப் போகிருர் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, செல்லப்பிள்ளை என்று சொல்வதில் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னது மருத்துவமனை. இது தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை.

* 310 வினு—திரு. க. மருதாசலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை அருகில் உள்ள சிங்காநல்லூரில் உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனைக்கு அறிஞர் அண்ணு அவர்களின் பெயர் சூட்ட வேண்டுமென்ற திட்டம் கைவிடப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், இத் திட்டத்தினை மறுபரிசீலனை செய்ய அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, கோவையை அடுத்துள்ள சிங்காநல்லூரிலுள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனைக்கு அறிஞர் அண்ணுவினுடைய பெயரை வைக்க வேண்டுமென்பது பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சொல்லி வருகின்ற ஒன்று. அதனைக் கைவிட்டு விட்டதா அரசு என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணு அவர்களின் பெயரை வைக்க வேண்டுமென்று 1969-ல் அரசு முடிவெடுத்தது. தொழிற் சங்கங்கள் திரு. என்.ஜி.ஆர். அவர்கள் பெயரை வைக்க வேண்டுமென்றிருந்தது. ஆனுல், மத்திய அரசின் ஆணையின்படி யாருடைய பெயரும் வைக்கக் கூடாது என்ற காரணத்தினுல், யாருடைய பெயரும் வைக்கப்படவில்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே அரசு ஏற்கனவே ஒரு முடிவிற்கு வந்திருக்கிறது. அந்த முடிவினுடைய அடிப்படையில் மீண்டும் ஏதாவது பெயர் வைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு உத்தேசம் இல்லை.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, அறிஞர் அண்ணு வினுடைய பெயரை அந்த மருத்துவமனைக்கு வைப்பதிலே சிக்கல் இருப்பதாகவும் மத்திய அரசிடமிருந்து அதற்கு அனுமதி வேண்டு மென்றும் அமைச்சரவர்கள் சொன்னுர்கள். அண்ணுவினுடைய பெயரை அம் மருத்துவமனைக்கு வைக்க மாநில அரசு மீண்டும் மத்திய அரசை வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவ ரவர்களே, இங்கே மத்திய அரசு என்பது, அரசு ஈட்டுறுதிக் கழகம் என்று ஒன்றிருக்கிறது—அதைக் குறிக்கிறது. அதனுடைய முடிவு இது. முடிந்துபோன பிரச்னையை மீண்டும் எடுப்பது அவ்வளவு உசிதம் அல்ல என்று கருதப்படுகிறது.

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவரவர்களே, கோயம் புத்தூரிலே இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் தொழிலாளர்களுக்கு விடுமுறை தருவதில் அவசர காலத்தில் பின்பற்றப்பட்டுவந்த முறையை, இந்த அரசாங்கமும் தொடர்ந்து கடைப்பிடிக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதைப் போலவே, தொழி லாளர்களுக்கு மருத்துவர்கள் விடுமுறை தர மறுக்கிருர்கள். அதனை நீக்க அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு லீவு தருவது அவர்களுக்குள்ள நோயைப் பொறுத்தது. அதை நிர்ணயிக்க வேண்டியவர்கள் மருத்துவர்கள்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவரர்களே இந்தப் பெயர் வைக்கும் விஷயத்திலே மறுபடியும் நாங்கள் தலையிட விரும்பவில்லை என்று சொல்வதைப் பொறுத்தவரைக்கும் நான் தலையிடவில்லை. அது அவர்களுடைய இஷ்டம். ஆனுல் மத்திய அரசு அதாவது அந்தக் கழகத்தினுடைய தலைமை என்ற அர்த்தத் தில் நீங்கள் இங்கு சொல்லி இருக்கிறீர்கள். அவர்கள் பெயரைப் போடக் கூடாது என்று சொன்னுல், மாநில அரசுக்கு ஒரு பெயர் வைக்கக்கூட இன்டிபென்டன்ட் டெசிஷன் எடுக்க அதிகாரம் இருக்கிறதா, இல்லையா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர வர்களே இது சென்ட்ரல் கவர்ன்மென்ட்டினுடைய பாலிசி. அந்தக் கடிதத்தினுடைய நகலை மாண்புமிகு உறுப்பினருக்கு நாளைய மறுதினம் அனுப்பி வைக்கிறேன்.

1978 பிப்ரவரி 28]

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லும்போது மாநில அரசுக்குப் பெயர் வைக்கின்ற அதிகாரம் இல்லையென்று சொன்னார்கள். இதை வைத்தாவது புதிய அரசு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே இந்தக் கழகத்தின் அமைப்பே டெல்லியில் தலைமைப் பீடம். இங்கே இருப்பது அதனுடைய கிளைகள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே இ.எஸ்.ஐ. திட்டத்திலே மாநில சர்க்காருடைய பங்கு என்ன? மத்திய அரசும் பங்கு போடுகிறது—மாநில சர்க்காருடைய பங்கு என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*311 வினா— திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளில் மருந்து கொள்முதல் செய்வதை பரவலாக்குவது என்ற முறையை அரசு அமுலாக்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதனால் ஏற்பட்டுள்ள நன்மைகள் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 9–40.]

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் சப்ளையாகின்ற மருந்துகள் யாவும் ஒரு மையத்திலிருந்து விநியோகிக்கப்படுகிறதா ? அல்லது அந்த மருத்துவமனைகள் இல்லாத பெரிய டிஸ்பென்சரிகள் உட்பட்ட பெரிய Net work of organisations இருப்பதால் இதற்குப் பல இடங்களில் பரவலாக வழங்குவதனால் பலன் இல்லையா, எது சிறந்தது என்பதற்கான விடையை எதிர் பார்க்கிறேன்.